சாராம்சம்: இனிய குழந்தைகளே, உங்களை பக்த ஆத்மாக்களிலிருந்து, ஞான ஆத்மாக்களாக மாற்றுவதற்காகவும், தூய்மையற்றவர்களிலிருந்து தூய்மையானவர்களாக ஆக்குவதற்காகவும் தந்தை வந்துள்ளார்.

கேள்வி: ஞானமுள்ள குழந்தைகள் சதா எத்தகைய எண்ணங்களைக் கொண்டிருப்பார்கள்?

பதில்: நான் ஒரு அநாதியான ஆத்மா, இந்த சரீரம் அழியக்கூடியது, நான் 84 சரீரங்களை எடுத்துள்ளேன். இது எனது இறுதிப்பிறவியாகும். ஆத்மாக்கள் ஒருபோதும் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ ஆகுவதில்லை. சரீரங்களே சிறியதிலிருந்து பெரியதாக ஆகின்றன. சரீரமே கண்களைக் கொண்டிருக்கின்றது, ஆனால் ஆத்மாவாகிய நான் அவற்றின் மூலம் பார்க்கின்றேன். பாபா ஆத்மாக்களுக்கு மூன்றாவது கண்ணாகிய ஞானக் கண்ணைக் கொடுக்கின்றார். அவர் ஒரு சரீரத்தை ஆதாரமாக எடுக்காமல், அவரால் கற்பிக்க முடியாது. இம்மாதிரி எண்ணங்களையே ஞானமுள்ள குழந்தைகள் சதா கொண்டிருக்கின்றார்கள்.

ஓம்சாந்தி. இதைக் கூறியது யார்? ஆத்மாவே இதைக் கூறினார். அழியாத ஆத்மா இதனைச் சரீரத்தின் மூலம் கூறியுள்ளார். ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. சரீரமானது பஞ்ச தத்துவங்களாலான ஒரு பெரிய பொம்மையாகும். சரீரம் சிறியதாக இருந்தாலும்கூட அது ஆத்மாவை விடப் பெரியதாகவே இருக்கும். ஆரம்பத்தில் அது ஒரு பூரண வளர்ச்சியடையாத கரு ஆகும். பின் அது சிறிதளவு வளர்ந்தவுடன் ஓர் ஆத்மா அதனுள் பிரவேசிக்கின்றார். அது தொடர்ந்து வளர்ச்சியடைந்து மிகவும் பெரியதாகின்றது. ஆத்மா உயிருள்ளவர். ஆத்மா உட்புகாதவரை சரீரமாகிய பொம்மையினால் எவ்வித பிரயோஜனமும் கிடையாது. இதில் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. ஆத்மாவே பேசுவதுடன் அசையவும் செய்கின்றார். அவர் ஒரு மிகச் சிறிய புள்ளியாவார். ஆத்மா ஒருபோதும் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ ஆகுவதில்லை. ஆத்மா ஒருபோதும் அழிவதும் இல்லை. பரமாத்மாவான தந்தை உங்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார்: நான் அழிவற்றவர், ஆனால் இந்தச் சரீரம் அழியக்கூடியது. நான் என்னுடைய பாகத்தை நடிப்பதற்காக இதற்குள் பிரவேசித்திருக்கிறேன். நீங்கள் இப்போது இவ்விடயங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். முன்னர், நீங்கள் ஆத்மாவைப் பற்றியோ பரமாத்மாவைப் பற்றியோ அறிந்திருக்கவில்லை. நீங்கள் பெயரளவில் 'ஓ பரமதந்தை, பரமாத்மா" எனக் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் உங்களை ஆத்மாக்களாகக் கருதி இருந்திருக்கின்றீர்கள். ஆனால், பின் எவரோ ஒருவர் உங்களைப் பரமாத்மா என உங்களுக்குக் கூறினார். அப்படிக் கூறியது யார்? பக்திமார்க்கத்திலுள்ள குருமாரும் சமயநூல்களும் ஆகும். எவரும் அதனை உங்களுக்குச் சத்தியயுகத்தில் கூறமாட்டார்கள். இப்பொழுது தந்தை, நீங்களே அவருடைய குழந்தைகள் என்ற புரிந்துணர்வை உங்களுக்குக் கொடுத்திருக்கின்றார். ஆத்மா இயற்கையானவர். சரீரம் செயற்கையானது, களிமண்ணாலானது. ஒரு

சரீரத்தில் ஓர் ஆத்மா இருக்கும் போதே சரீரம் பேசவும் அசையவும் செய்கின்றது. தந்தை வந்து ஆத்மாக்களாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது அறிகின்றீர்கள். சங்கமயுகத்தில் மாத்திரமே அசரீரியான சிவபாபா இந்தச் சரீரத்தின் மூலம் உங்களுடன் பேசுகின்றார். இக் கண்கள் சரீரத்தின் அங்கமாகும். தந்தை இப்பொழுது உங்களுக்கு ஞானக் கண்ணைக் கொடுக்கின்றார். ஆத்மாவில் எவ்வித ஞானமும் இல்லாத போது, அங்கே அறியாமை என்ற கண்ணே இருக்கும். தந்தை வரும் போதே ஆத்மா ஞானக் கண்ணைப் பெறுகின்றார். ஆத்மாவே அனைத்தையும் செய்கின்றார். ஆத்மா சரீரத்தின் மூலம் செயல்களை ஆற்றுகின்றார். தந்தை இச்சரீரத்தைத் தத்தெடுத்திருக்கின்றார் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். அவர் தன்னைப் பற்றிய இரகசியங்களையும், உலகின் ஆரம்பம், மத்தி, இறுதியின் இரகசியங்களையும் விளங்கப்படுத்துகின்றார். அவர் முழு நாடகத்தின் ஞானத்தையும் கொடுக்கின்றார். முன்னர் நீங்கள் எதனையும் அறிந்திருக்கவில்லை. ஆமாம், நிச்சயமாக இது ஒரு நாடகமேயாகும். உலகச் சக்கரம் சுற்றிய வண்ணமே இருக்கின்றது. ஆனால் அது எவ்வாறு சுழல்கின்றது என்பதை எவரும் அறியவில்லை. நீங்கள் இப்பொழுது படைப்பவரினதும், படைப்பின் ஆரம்பம், மத்தி, இறுதியினதும் ஞானத்தைப் பெறுகின்றீர்கள். ஏனைய அனைத்தும் பக்தியாகும். தந்தை வந்து உங்களை ஞானமுள்ள ஆத்மாக்கள் ஆக்குகின்றார். முன்பு நீங்கள் பக்த ஆத்மாக்களாக இருந்தீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள், பக்தி செய்தீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் இப்பொழுது ஞானத்தைச் செவிமடுக்கின்றீர்கள். பக்தி, இருள் என அழைக்கப்படுகின்றது. நீங்கள் பக்தி செய்வதன் மூலம் கடவுளைச் சந்திக்கலாம் எனக் கூற முடியாது. பக்தியின் பாகமும் ஞானத்தின் பாகமும் இருப்பதாக தந்தை விளங்கப்படுத்தியுள்ளார். நீங்கள் பக்தி செய்த காலத்தில் சந்தோஷம் இருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்கின்றீர்கள். பக்தி செய்யும்போது நீங்கள் கடவுளைத் தேடித் தடுமாறி அலைந்தீர்கள். கடவுளைக் காண முயற்சிக்கும்போது யாகங்களை உருவாக்குதல், பிராயச்சித்தம் செய்தல், தானம் கொடுத்தல், புண்ணிய காரியங்களைச் செய்தல் போன்ற அனைத்தும் உங்களைத் தடுமாறி அலைவதற்கும், துன்பத்திற்கு உள்ளாக்குவதற்கும் மாத்திரமே வழிகாட்டியுள்ளது என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். தொடர்ந்து நீங்கள் வீழ்ச்சியடையும்போது, தமோபிரதான் ஆகிவிட்டீர்கள். தவறான காரியங்களைச் செய்தல் என்றால் அழுக்கடைதல் என்பதாகும். நீங்களும் தூய்மையற்றவர்கள் ஆகிவிட்டீர்கள். நீங்கள் தூய்மை ஆகுவதற்காக பக்தி செய்தீர்கள் என்றில்லை. கடவுளால் தூய்மையாக்கப்படாமல், உங்களால் தூய்மையான உலகிற்குச் செல்ல முடியாது. அப்படியெனில், நீங்கள் தூய்மையாகும்வரை கடவுளைச் சந்திக்க முடியாது என்று அர்த்தம் இல்லை. தங்களை தூய்மையாக்குமாறு கடவுளை மக்கள் வேண்டுகின்றார்கள். தூய்மையற்றவர்களே, தூய்மையாகுவதற்காகக் கடவுளைச் சந்திக்கின்றார்கள். கடவுள் தூய்மையானவர்களைச் சந்திப்பதில்லை. கடவுள் சத்தியயுகத்தில் இலக்ஷ்மி நாராயணனைச் சந்திப்பதில்லை. கடவுள் வந்து தூய்மையற்ற உங்களைத் தூய்மையாக்குகின்றார். அதன் பின் நீங்கள் உங்கள் சரீரத்தை விட்டுவிடுகின்றீர்கள். தூய்மையானவர்களால் இந்த தூய்மையற்ற தமோபிரதான் உலகில் வாழ முடியாது. தந்தை உங்களைத் தூய்மையாக்கிப்

பின் மறைந்துவிடுகின்றார். நாடகத்தில் அவரது பாகம் அற்புதமானது. ஆத்மாக்கள் கண்களுக்கும் புலப்படாதவர்கள். ஒருவர் ஓர் ஆத்மாவின் காட்சியைக் கண்டிருந்தாலும் கூட, அவரால் அதனைப் புரிந்துகொள்ள முடியாது. உங்களால் ஏனைய அனைவரையும் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். இவரை இவரென்றும், அவரை அவரென்றும் உங்களால் உணர்ந்து, அவர்களை நினைவு செய்ய முடியும். மக்கள் உயிருள்ள ரூபத்தில் ஒருவரின் காட்சியைக் காண விரும்பினாலும், அதில் எவ்வித பலனும் இல்லை. நல்லது, நீங்கள் அவர்களை உயிருள்ள ரூபத்தில் பார்த்தாலும் கூட, அதில் உள்ள பலன் என்ன? நீங்கள் ஒரு காட்சியைக் கண்டிருந்தாலும் கூட, மீண்டும் அக்காட்சி மறைந்துவிடும். உங்களுடைய சந்தோஷத்திற்கான ஆசை தற்காலிகமாக மாத்திரமே நிறைவேற்றப்படும். அது ஒரு கணத்திற்கான தற்காலிக சந்தோஷம் என அழைக்கப்படுகின்றது. ஒரு காட்சியைக் காண வேண்டும் என்ற ஆசை நிறைவேற்றப்படுகின்றது, அவ்வளவேதான்! இங்கு தூய்மையற்றதிலிருந்து தூய்மையாகுவதே முதன்மையான விடயமாகும். நீங்கள் தூய்மையாகினால், ஒரு தேவனாகி சுவர்க்கத்திற்குச் செல்வீர்கள். சமயநூல்களில் ஒரு கல்பத்தின் கால எல்லை நூறாயிரம் வருடங்கள் என அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் இன்னமும் 40,000 வருடங்கள் கலியுகத்தில் மீதம் இருப்பதாக நினைக்கின்றார்கள். முழுக் கல்பமும் 5000 வருடங்களே நீடித்திருக்கும் என பாபா விளங்கப்படுத்துகின்றார். எனவே மக்கள் இருளில் இருக்கின்றார்கள். அதுவே காரிருள் எனப்படுகின்றது. எவரிடமும் எந்த ஞானமும் இல்லை. அவை அனைத்தும் பக்தியாகும். இராவணன் வந்ததிலிருந்து, அவனுடன் பக்தியும் இங்கே வந்துவிட்டது. தந்தை வரும்போது, அவர் தன்னுடன் ஞானத்தையும் கொண்டுவருகின்றார். நீங்கள் பாபாவிடமிருந்து ஒரு முறை மாத்திரமே ஞானம் என்னும் ஆஸ்தியைப் பெறுகின்றீhகள். அதனை நீங்கள் மீண்டும் மீண்டும் பெறமுடியாது. அங்கு நீங்கள் எவருக்கேனும் ஞானம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அறியாமையில் உள்ளவர்களே ஞானத்தைப் பெறுகின்றார்கள். தந்தையை எவருமே அறியமாட்டார்கள். அவர்கள் தந்தையை அவதூறு செய்யாமல் எதையும் கூறமாட்டார்கள். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது இதனையும் புரிந்து கொள்கின்றீர்கள். கடவுள் சர்வவியாபி அல்லர், அவர் அனைத்து ஆத்மாக்களினதும் தந்தை என நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் அவர்களோ கடவுள் கற்களிலும் கூழாங்கற்களிலும் இருக்கின்றார் எனக் கூறுகின்றார்கள். பக்தி ஞானத்தை விட முற்றிலும் வேறுபட்டது எனக் குழந்தைகளாகிய நீங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். அதில் சிறிதளவு கூட ஞானம் கிடையாது. காலப்பகுதி முழுமையாக மாறுகின்றது. கடவுளுடைய பெயர் மாறுவதுடன் மனிதர்களுடைய பெயர்களும் மாறுகின்றன. ஆரம்பத்தில் அவர்கள் தேவர்கள் என அழைக்கப்பட்டார்கள். பின் அவர்கள் சத்திரியர், வைசியர், சூத்திரர் எனப்படுகின்றனர். அவர்கள் தெய்வீகக் குணங்கள் கொண்ட மனிதர்கள். ஆனால் இவர்களோ அசுரக் குணங்களைக் கொண்ட மனிதர்கள். அவர்கள் முற்றிலும் அழுக்கானவர்கள். அநேகமான மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்கான வருமானத்தை நியாயமற்ற வழிகளில் சம்பாதிக்கின்றார்களென குருநானக் கூறியுள்ளார். இதனை வேறு எவரேனும் கூறியிருப்பார்களாயின், அவர் தங்களை அவதூறு செய்வதாக மக்கள் உடனடியாக கூறியிருப்பார்கள். எவ்வாறாயினும், தந்தை கூறுகின்றார்: இவை அனைத்தும் அசுர சமுதாயத்திற்கு உரியவை. அவர் உங்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்துகின்றார். அது இராமரின் சமுதாயம். மற்றையது இராவணனின்

சமுதாயம். காந்திஜியும் இராம இராச்சியத்தையே விரும்பினார். இராவணனின் இராச்சியத்தில் அனைவரும் விகாரமானவர்கள், இராம இராச்சியத்தில் அனைவரும் விகாரமற்றவர்கள் ஆவர். இந்த இராச்சியம் மிக ஆழ் நரகமான விலைமாதர் இல்லம் என அழைக்கப்படுகின்றது. இந்த நேரத்தில், மனிதர்கள் நச்சாற்றில் இருக்கின்றார்கள். மனிதர்களும் மிருகங்கள் போன்ற அனைத்தும் ஒரே மாதிரியாக உள்ளன. மனிதர்களுக்கென புகழ் கிடையாது. மனிதர்களிலிருந்து தேவர்களாக மாறுவதன் மூலம் குழந்தைகளாகிய நீங்கள் ஐந்து விகாரங்களையும் வெற்றிகொண்டு தேவ அந்தஸ்தைப் பெறுகின்றீர்கள். ஏனைய அனைத்தும் முடிவடைகின்றன. தேவர்கள் சத்தியயுகத்தில் வாழ்ந்தார்கள். அசுரர்கள் இப்பொழுது கலியுகத்தில் வாழ்கின்றார்கள். அசுரர்களின் அடையாளம் என்ன? ஐந்து விகாரங்கள். தேவர்கள் முற்றிலும் விகாரம் அற்றவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அசுரர்களோ முற்றிலும் விகாரமானவர்கள் எனப்படுகின்றனர். அத்தேவர்கள் பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்றவர்கள், ஆனால் இங்கு கலைகளே கிடையாது. அனைவருடைய கலைகளும், சரீரமும் முற்றிலும் சீரழிந்ததாகிவிட்டன. பழைய விகாரமான உலகினை மாற்றுவதற்காகவே தந்தை வந்துள்ளார் என்பதை அவர் இப்பொழுது இங்கமர்ந்திருந்து, குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். தந்தை இராவண இராச்சியத்தை, அதாவது, விலைமாதர் இல்லத்தை சிவாலயமாக மாற்றுகின்றார். அவர்கள் திரிமூர்த்தி இல்லம், திரிமூர்த்தி வீதி என்னும் பெயர்களை இங்கு பயன்படுத்தியுள்ளார்கள். முன்னர் ஒருபோதும் அவர்கள் இத்தகைய பெயர்களைக் கொண்டிருந்ததில்லை. உண்மையில் அது என்னவாக இருந்திருக்க வேண்டும், இந்த முழு உலகமும் யாருக்கு உரியது? அது பரமாத்மாவிற்குரியது. கடவுளின் உலகம், அரைக்கல்பத்திற்குத் தூய்மையானதாகவும், அரைக்கல்பத்திற்குத் தூய்மையற்றதாகவும் இருக்கின்றது. தந்தையே படைப்பவர் என அழைக்கப்படுகின்றார். எனவே இது அவருடைய உலகமாகும், தந்தை விளங்கப்படுத்துகின்றார்: நானே அதிபதியும், உணர்வுள்ளவரும், விதையும், ஞானக் கடலுமாவேன். நான் அனைத்து ஞானத்தையும் கொண்டிருக்கின்றேன். வேறு எவரும் இந்த ஞானத்தைக் கொண்டிருப்பதில்லை. உலகச் சக்கரத்தின் ஆரம்பம், மத்தி, இறுதியின் ஞானத்தை தந்தை மாத்திரமே கொண்டிருக்கின்றார் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். ஏனைய அனைத்தும் பொய்க் கதைகளாகும். பிரதானமான பொய்க்கதை மிகவும் தீயதாகும். இதனாலேயே, தந்தை முறையிடுகின்றார்: நான் கற்களிலும், கூழாங்கற்களிலும், பூனைகள், நாய்களிலும் இருப்பதாகவே நீங்கள் நினைத்தீர்கள்! நீங்கள் எவ்வளவு சீரழிந்த நிலையை அடைந்துள்ளீர்கள் எனப்பாருங்கள்! புதிய உலகத்து மனிதர்களுக்கும், பழைய உலக மனிதர்களுக்குமிடையே பகலுக்கும், இரவுக்குமான வித்தியாசம் இருக்கின்றது. அரைக்கல்பமாக தூய்மையற்ற மனிதர்கள், தூய்மையான தேவர்களின் விக்கிரகங்களை வழிபடுகிறார்கள். ஆரம்பத்தில் சிவபாபாவையே வழிபாடு செய்திருக்கின்றார்கள் என்பது குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. சிவபாபாவே உங்களைப் பூஜிப்பவர்களிலிருந்து பூஜிக்கத் தகுதிவாய்ந்தவராக மாற்றுகின்றார். இராவணன் உங்களை பூஜிக்கத் தகுதி வாய்ந்தவர்களிலிருந்து பூஜிப்பவர்களாக மாற்றுகின்றான். பின் நாடகத்திட்டத்தின்படி தந்தை உங்களைப் பூஜிக்கத் தகுதிவாய்ந்தவராக ஆக்குகின்றார். இராவணன் போன்ற பெயர்கள் இருக்கின்றன. அவர்கள் தசேரா பண்டிகையைக் கொண்டாடும் போது வெளிநாடுகளிலிருந்து மக்கள் பலரையும்

அழைக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதில்லை. அவர்கள் தேவர்களைப் பெருமளவு அவதூறு செய்கின்றார்கள், ஆனால் அது அப்படியல்ல. கடவுள் பெயர், ரூபத்திற்கு அப்பாற்பட்டவர் என அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அவர் இல்லை என்று அது அர்த்தமல்ல. அதே போன்று அவர்கள் உருவாக்குகின்ற நாடகங்கள் போன்றவைகளும் அப்படியானதாக இல்லை. அது மனிதர்களின் புத்தியாகும். மனித வழிகாட்டல்கள் அசுர வழிகாட்டல்கள் எனப்படுகின்றது. அனைத்து அரசர்களும், அரசிகளும், பிரஜைகளும் மற்றும் அனைவரும் அவ்வாறே ஆகின்றார்கள். இது அசுர உலகம் என அழைக்கப்படுகின்றது. அனைவரும் ஒருவரை ஒருவர் அவதூறு செய்தவண்ணம் இருக்கின்றார்கள். எனவே தந்தை விளங்கப்படுத்துகின்றார்: குழந்தைகளே, நீங்கள் இங்கு அமர்ந்திருக்கும் போது, உங்களை ஓர் ஆத்மாவாகக் கருதித் தந்தையை நினைவு செய்யுங்கள். நீங்கள் அறியாமையில் இருந்த போது கடவுள் மேலே இருக்கின்றார் என்று கூறினீர்கள். தந்தை கீழே வந்துள்ளார் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள். எனவே, அவர் மேலே இல்லை என்பதை இப்போது புரிந்துகொள்கின்றீர்கள். தந்தையை இந்தச் சரீரத்திற்குள் இங்கு வருமாறு நீங்கள் அழைத்தீர்கள். நீங்கள் உங்களுடைய நிலையங்களில் இருக்கும் போதும் சிவபாபா மதுவனத்தில் இந்தச் சரீரத்தில் (பிரம்மா) இருக்கின்றார் என்பதை புரிந்துகொள்கின்றீர்கள். பக்தி மார்க்கத்தில் கடவுள் மேலே இருக்கின்றார் என்றே நினைத்திருந்தீர்கள். ஓ கடவுளே! என நீங்கள் அழைத்தீர்கள். இப்பொழுது தந்தையை நீங்கள் எங்கு நினைவு செய்கின்றீர்கள்? நீங்கள் அமர்ந்திருந்து என்ன செய்கின்றீர்கள்? அவர் பிரம்மாவின் சரீரத்தில் இருக்கின்றார் என்பதை நீங்கள் புரிந்துகொள்கின்றீhகள். எனவே நீங்கள் நிச்சயமாக அவரை இங்குதான் நினைவு செய்ய வேண்டும். அவர் மேலே இல்லை. அவர் அதிமங்களகரமான சங்கமயுகத்தில் இங்கு வந்துள்ளார். தந்தை கூறுகின்றார்: நான் உங்களை மிக மிக மேன்மையானவர்களாக ஆக்குவதற்வே இங்கு வந்துள்ளேன். குழந்தைகளாகிய நீங்கள் அவரை இங்கு நினைவு செய்கின்றீர்கள். ஆனால் பக்தர்கள் அவரை மேலே நினைவு செய்கின்றார்கள். நீங்கள் வெளிநாட்டில் இருந்தாலும் கூட, நீங்கள் இன்னமும் சிவபாபா பிரம்மாவின் சரீரத்தில் இருக்கின்றார் என்றே கூறுகின்றீர்கள். ஒரு சரீரம் நிச்சயமாகத் தேவைப்படுகின்றது. நீங்கள் எங்கு இருந்தாலும் அவரை நிச்சயமாக இங்கு (மதுவனம்) தான் நினைவு செய்ய வேண்டும். நீங்கள் பிரம்மாவின் சரீரத்திலேயே அவரை நினைவு செய்தல் வேண்டும். சில அறிவற்ற மக்கள் பிரம்மாவை ஏற்றுக்கொள்வதில்லை. பிரம்மாவை நினைவு செய்ய வேண்டாம் என பாபா கூறுவதில்லை. பிரம்மாவை நினைவு செய்யாமல், எப்படிச் சிவபாபாவை நினைவு செய்ய முடியும்? தந்தை கூறுகின்றார்: நான் இந்தச் சரீரத்தில் இருக்கின்றேன். நீங்கள் என்னை இவரில் (பிரம்மா) நினைவு செய்கிறீர்கள். அதனாலேயே நீங்கள் பாபா, தாதா இருவரையும் நினைவு செய்கின்றீர்கள். இவர் வேறு ஓர் ஆத்மா என்ற ஞானத்தை நீங்கள் உங்கள் புத்தியில் கொண்டிருக்கின்றீர்கள். சிவபாபாவிற்குத் தனக்கென ஒரு சரீரம் கிடையாது. தந்தை கூறுகின்றார்: நான் சடப்பொருளை ஆதாரமாக எடுக்கின்றேன். தந்தை இங்கிருந்து முழு பிரம்மாந்தத்தின் உட்கருத்தையும், உலகின் ஆரம்பம், மத்தி, இறுதியையும் விளங்கப்படுத்துகின்றார். நானும் நீங்களும் வாழ்கின்ற பிரம்மாந்தத்தை, அதாவது பிரம்ம தத்துவத்தைப் பற்றி வேறு எவரும் அறியமாட்டார்கள். பரம

தந்தையினதும், பரமன் அல்லாத ஆத்மாக்களினதும் வசிப்பிடம் அமைதி தாமமாகிய பிரம்ம தத்துவம் ஆகும். அமைதி தாமம் மிக இனிமையானதொரு பெயராகும். இவ்விடயங்கள் அனைத்தும் உங்கள் புத்தியில் இருக்கின்றன. ஆதியில், நீங்கள் மகாதத்துவமான பிரம்ம தத்துவத்தின் வாசிகளாக இருந்தீர்கள். அது சத்தத்திற்கு அப்பாற்பட்ட நிர்வாண் தாமம் என அழைக்கப்படுகின்றது. இவ்விடயங்கள் அனைத்தும் இப்பொழுது உங்கள் புத்தியில் இருக்கின்றன. பக்தி இருந்த காலத்தில் ஞானத்தைப் பற்றிய வார்த்தை எதுவுமே இருந்ததில்லை. மாற்றம் இடம்பெறுகின்ற இக்காலம் அதிமங்களகரமான சங்கமயுகம் என அழைக்கப்படுகின்றது. அசுரர்கள் பழைய உலகில் வசிக்கின்றனர், தேவர்கள் புதிய உலகில் வசிக்கின்றனர், எனவே அவர்களை மாற்றுவதற்குத் தந்தை வரவேண்டும். சத்தியயுகத்தில் இவை எதனையும் நீங்கள் அறியமாட்டீர்கள். நீங்கள் இப்பொழுது கலியுகத்தில் இருக்கின்ற போதிலும் இன்னமும் நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. நீங்கள் புதிய உலகில் இருக்கும் போது, பழைய உலகினைப் பற்றி எதையும் அறியமாட்டீர்கள். இப்பொழுது நீங்கள் பழைய உலகில் இருக்கின்றீர்கள். புதிய உலக ஞானத்தை நீங்கள் கொண்டிருக்கவில்லை. புதிய உலகம் எப்போது இருந்தது என மக்களுக்குத் தெரியாது. அவர்கள் பல நூறாயிரம் வருடங்கள் பற்றிப் பேசுகின்றார்கள். தந்தை ஒவ்வொரு கல்பத்திலும் சங்கமயுகத்தில் மாத்திரமே வருகின்றார் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். அவர் வந்து பல்வகை விருட்சத்தின் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்துகின்றார். இச்சக்கரம் எப்படிச் சுழல்கின்றது என்பதையும் அவர் குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். உங்களுடைய தொழில் இதனை ஏனையோருக்கு விளங்கப்படுத்துவதேயாகும். தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் விளங்கப்படுத்துவதற்கு அதிக நேரம் எடுக்கும். இதனாலேயே நீங்கள் ஒரேநேரத்தில் பலருக்கு விளங்கப்படுத்துகின்றீர்கள். பலர் வந்து புரிந்துகொள்கின்றார்கள். நீங்கள் இந்த இனிமையான விடயங்களைப் பலருக்கு விளங்கப்படுத்த வேண்டும். நீங்கள் கண்காட்சி போன்றவற்றிலும் விளங்கப்படுத்துங்கள். சிவஜெயந்தி நேரத்தில் நீங்கள் பலரை அழைத்து, அவர்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். உங்களால் இந்த நாடகத்தின் கால எல்லையை அவர்களுக்கு மிகச்சரியாக விளங்கப்படுத்த முடியும். இவையே நாங்கள் உங்களுக்கு விளங்கப்படுத்துவதற்கான தலைப்புகள் ஆகும். தந்தை இந்த ஞானத்தை உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். அதன் மூலம் நீங்கள் தேவர்கள் ஆகின்றீர்கள். நீங்கள் எவ்வாறு இதனைப் புரிந்துகொண்டு தேவர்கள் ஆகுகின்றீர்களோ, அதேபோன்று ஏனையோரும் அவ்வாறு ஆகுவதற்கு நீங்கள் தூண்ட வேண்டும்: தந்தை இதனை எங்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார். நாங்கள் எவரையும் அவதூறு செய்வதில்லை. சற்கதிக்கான பாதை ஞானம் என்றே நாங்கள் கூறுகின்றோம். ஒரே ஒரு சற்குரு மாத்திரமே அனைவரையும் அப்பால் அழைத்துச் செல்கின்றார். நீங்கள் அப்படியான முக்கிய கருத்துக்களைப் பிரித்தெடுத்து, அதனை அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். தந்தையைத் தவிர வேறு எவராலும் இந்த ஞானம் அனைத்தையும் கொடுக்க முடியாது. அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக

இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. பூஜிப்பவர்களிலிருந்து பூஜிக்கத் தகுதிவாய்ந்தவராக ஆகுவதற்கு முற்றிலும் விகாரமற்றவர்கள் ஆகுங்கள். ஞானம் நிரம்பியவர்களாகி உங்களை மாற்றுங்கள். நீங்கள் தற்காலிக சந்தோஷத்திற்குப் பின்னால் ஓடாதீர்கள்.
2. நீங்கள் பாபா, தாதா இருவரையும் நினைவு செய்ய வேண்டும். நீங்கள் பிரம்மாவை நினைவுசெய்யாமல், சிவபாபாவை நினைவுசெய்ய முடியாது. பக்திமார்க்கத்தில், நீங்கள் அவரை மேலே நினைவு செய்தீர்கள். இப்பொழுது அவர் பிரம்மாவின் சரீரத்தில் பிரவேசித்துள்ளார். நீங்கள் அவர்கள் இருவரையும் நினைவுசெய்ய வேண்டும்.

ஆசீர்வாதம்: ஒவ்வொரு செயலிலும் வெற்றியைக் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையையும் போதையையும் கொண்டிருப்பதன் மூலம் சகல உரிமைகளையும் கொண்டிருப்பீர்களாக.

வெற்றி எமது பிறப்புரிமை. சதா இந்த விழிப்புணர்வுடன் தொடர்ந்தும் பறந்திடுங்கள். என்ன நடந்தாலும், இதை உங்களின் விழிப்புணர்வில் வைத்திருங்கள்: நான் சதா வெற்றியாளன். என்னதான் நடந்தாலும், இந்த நம்பிக்கை உறுதியாக இருக்க வேண்டும். போதையின் அடிப்படை, நம்பிக்கை. நம்பிக்கை குறைவாக இருந்தால், போதையும் குறைவாகவே காணப்படும். இதனாலேயே, நம்பிக்கையுள்ள புத்திகளைக் கொண்டவர்கள் வெற்றியாளர்கள் எனக் கூறப்படுகிறது. சிலவேளைகளில் மட்டும் நம்பிக்கை கொண்டவர் ஆகாதீர்கள். தந்தை அழியாதவர். எனவே, உங்களிடம் அழியாத பேறுகளின் உரிமை உள்ளது. உங்களின் ஒவ்வொரு செயலிலும் வெற்றியைக் கொண்டிருப்பதன் நம்பிக்கையும் போதையும் இருக்க வேண்டும்.

சுலோகம்: தந்தையின் அன்புக் குடையின் கீழ் இருக்கும் போது, எந்தவொரு தடையாலும் உங்களுடன் நிலைத்திருக்க முடியாது.

**---ஓம் சாந்தி---**